# 7. தொழில்நிலை

## 7.1. பொது நோக்கு

1995 இல் பொருளாதாரம் 5.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் 1994 இன் கிட்டத்தட்ட 89,000 த்துடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட 80,000 - 90,000 மேலதிக தொழில்வாய்ப்புக்களையும் உருவாக்கியது. அரசதுறையின் சீர்திருத்தங்களின் காரணமாக அரசுசார்துறையின் தொழில்வாய்ப்புக்களின் பாகமொன்று தனியார்துறைக்கு நகர்ந்தமையின் காரணமாக தொழில் உருவாக்கத்திற்கான பங்களிப்பு அரசதுறை மற்றும் தனியார்துறை ஆகிய இரண்டிலிருந்தும் பெறப்பட்டது. இவ்வாண்டில் உருவாக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கிற்கு முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகள் வகைகூறின.

1995 இல் உருவாக்கப்பட்ட புதிய தொழில்வாய்ப்புக்கள், தொழிற்படையில் புதிதாகச் சேர்ந்தோரில் 60 சதவீதத்தினை ஈர்ப்பதற்குப் போதுமானதாக இருந்தது. கிடைக்கத்தக்கதாக உள்ள தகவல்களின் அடிப்படையில் 1995 இல் தொழில்வாய்ப்பின்மைவீதம் கிட்டத்தட்ட 12 - 13 சதவீதம் என மதிப்பிடப்பட்டது. வெளிநாட்டுத்தொழில் வாய்ப்புக்களுக்காக அதிகரித்த வெளிசெல்லலும் 1995 இல் தொழில்வாய்ப்புக்கான அழுத்தத்தினை இலகுபடுத்தியது.

தனியாள் பணிகள், வர்த்தகம் மற்றும் சுற்றுலா விடுதிகள் தவிர்ந்த அனைத்து முக்கிய துறைகளும் 1995 இன் தொழில்நிலை வளர்ச்சிக்கு உதவின. 1994 இல் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிக்கு மாறாக வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்துறையின் தொழில்நிலை 7 சதவீதத்தினால் உயர்வடைந்தது. தயாரிப்பு நடவடிக்கைகளின் தொழில்நிலை 7 சதவீதத்தினால் உயர்வடைந்தது. தயாரிப்பு நடவடிக்கைகளின் தொழில்நிலை 1994 இன் 4 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 12 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 1995 இல் தனியாள் பணிகளின் தொழில்நிலை 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, இது, வேலையாட்கள், தனியாள் பணிகளிலிருந்து கூடியளவிற்கு நன்கமைந்த துறைக்கு மாறிச்சென்றமையை பெரும்பாலும் பிரதிபலித்தது.

## 7.2. அரசதுறை

மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட அரசதுறைத் தொழில் நிலை பற்றிய ஆண்டு அளவீட்டின்படி, அரசு மற்றும்அரசுசார்துறைகள் இரண்டினையும் உள்ளடக்கியது என வரைவிலக்கணப்படுத்தப்பட்ட அரசதுறையின் மொத்தத் தொழில்நிலை 1995 இல் 13 இலட்சம் என மதிப்பிடப்பட்டது. கடந்த இரு ஆண்டுகளில்

**அட்டவணை 7.1**


**தொழிற்படையும் தொழில்நிலையும்**

| | பத்து இலட்சம் ஆட்கள் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1994 | 1995 |
| மொத்த குடித்தொகை | 17.247 | 17.405 | 17.619 | 17.865 | 18.114 | 1.4 | 1.4 |
| குடித்தொகை (10வயதும் அதற்கு மேலும்) | 11.947 | 12.154 | 12.251 | 12.559 | 12.764 (அ) | 2.5 | வி.கி. |
| தொழிற்படை | 5.894 | 5.948 | 6.066 | 6.046 | 6.115 (அ) | -0.3 | வி.கி. |
| தொலிலிலுள்ளோர் | 5.084 | 5.159 | 5.227 | 5.315 | 5.339 (அ) | 1.7 | வி.கி. |
| அரசதுறை | 1.307 | 1.291 | 1.295 | 1.325 | 1.307 | 2.3 | -1.4 |
| அரசு | 0.653 | 0.654 | 0.676 | 0.700 | 0.738 | 3.5 | 5.4 |
| அரசுசார் துறைகள் | 0.654 | 0.637 | 0.619 | 0.625 | 0.569 | 1.0 | -8.9 |
| தனியார்துறை | 3.777 | 3.868 | 3.931 | 3.990 | | 1.5 | |
| மு.ச. தொழில் முயற்சிகள் | 0.085 | 0.104 | 0.180 | 0.206 | 0.233 | 14.3 | 13.5 |
| ஏனையவை | 3.691 | 3.764 | 3.751 | 3.784 | | 0.9 | |
| தொழிலற்றோர் | 0.810 | 0.789 | 0.839 | 0.731 | 0.786 (அ) | -12.9 | 7.4 |
| விஞ்ஞாபன விடயங்கள் | | | | | | | |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (%) | 49.3 | 48.9 | 49.5 | 48.1 | 47.9 (அ) | | வி.கி. |
| தொழிலற்றோர் வீதம் (%) | 13.8 | 13.3 | 13.8 | 12.1 | 12.7 (அ) | | வி.கி. |

(அ) 1995 மூன்றாம் காலாண்டுக்குரிய காலாண்டு தொழிற்படை அளவீடு

மூலங்கள் : குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 17.1
தொழில் நிலையின் துறைவாரியான உள்ளமைப்பு 1990 -1995




அவதானிக்கப்பட்ட அதிகரித்துச் சென்ற போக்கிற்கு மாறாக இது முன்னைய ஆண்டினைவிட 1.4 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. இவ்வீழ்ச்சிக்கு, அரசுசார் துறையில் ஏற்பட்ட 8.9 சதவீதங்கொண்ட வீழ்ச்சியே முழுக் காரணியாகும். நீண்டகாலக் குத்தகை உடன்படிக்கையின் கீழ், மூன்று பெரிய பெருந்தோட்டக்கூட்டு நிலையங்கள் தனியார்துறைக்கு மாற்றல் செய்யப்பட்டமை அரச தொழில் முயற்சிகள் சீரமைப்புக் கொள்கையுடன் இணைந்துகொண்டமை என்பன அரசுசார்துறையின் தொழில்நிலை வீழ்ச்சியடைய வழிவகுத்தது. எனினும் கடந்தசில ஆண்டுகளின்போது அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து மத்திய அரசாங்கம், மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அரசதுறையின் தொழில்நிலை தொடர்ச்சியாக விரிவடைந்து 1995 இல் 5.4 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அரசதுறையில் ஏற்பட்ட அதிகரிப்பு எழுதுவினைஞர் மற்றும் அதனோடுதொடர்புடைய வேலையாட்கள் வகையிலும் பெருமளவிற்குப் பிரதிபலித்தது. சமூர்த்தி நிகழ்ச்சித்திட்டங்களின்கீழ் சமூர்த்தி வழிகாட்டிகள் மற்றும் முகாமையாளர் நியமனங்கள் இவ்வகையின் உயர்ந்த வளர்ச்சிக்கு முக்கியபொறுப்பாக இருந்தன. வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்ப மற்றும் தொடர்பான வேலையாட்களைக் கொண்ட தொழில்சார்வகை முன்னைய ஆண்டினைவிட 2 சதவீதம்கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தமைக்கு நலத்துணைத்துறையில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்டபோக்கினைத் தொடர்ந்து 1995 இல் பணிகள் துறையின் தொழில்நிலை தொடர்ந்தும் விரிவடைந்தது.

### 7.3. துறைவாரியான தொழில்நிலை

பணிகளினால் ஈர்க்கப்பட்ட தொழிலாளர்களின் சார்புரீதியான பங்கின்படி தயாரிப்பு மற்றும் கட்டடவாக்கத்துறைகள் அதிகரித்த போக்கினைக் காட்டியவேளையில் வேளாண்மைத்துறை கடந்த அண்மைக்காலத்தில் படிப்படியாக வீழ்ச்சியை பதிவுசெய்து முன்னையதுறையின் வளர்ந்து செல்லும் முக்கியத்துவத்தைப் பிரதிபலித்தது.

குடிமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தொழிற்படைமீதான காலாண்டு அளவீட்டின்படி 1990 - 1994 காலப்பகுதியில் தொழில்நிலையின் துறைவாரியான உள்ளமைப்பில் அமைப்பு ரீதியான மாற்றங்கள் அவதானிக்கப்பட்டன. 1990 இல் தொழிற்படையில் 45 சதவீதத்தினை வேளாண்மைத்துறை ஈர்த்திருந்தது. 1994 இல் இப்பங்கு மொ. உ. உற்பத்திக்கான அதன்சார்பு ரீதியான பங்குடன் இணைந்து செல்லும் விதத்தில் 34 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வேளாண்மைத் துறையின் வீழ்ச்சியடைந்துசெல்லும் பங்கிற்கு மந்தமான வளர்ச்சியும் தயாரிப்பு மற்றும் பணிகள் துறையிலுள்ள வாய்ப்புகளுடன் ஒப்பிடுகையில் இத்துறையில் தொழில்வாய்ப்புக்கள் வரையறுக்கப் பட்டிருந்தமை என்பன பெருமளவு காரணங்களாக இருந்தன. வேளாண்மைத்துறையின் ஒழுங்கான வருமானம் நிச்சயமற்றதாக இருந்தமையும் இத்துறையின் தொழிலாளர் ஈர்ப்பு படிப்படியாக

அட்டவணை 7.2

## தொழிற்படையும் தொழில்நிலையும் 1990 - 1995*
### (ஆண்டின் மூன்றாம் காலாண்டு)

ப. இலட்சம் ஆட்கள்

| விடயம் | 1990 | 1993 | 1994 | 1995 |
|---|---|---|---|---|
| குடியிருப்பாளர் குடித்தொகை (10 வயதும் அதற்கு மேலும்) | 11.633 | 12.284 | 12.479 | 12.763 |
| தொழிற்படை | 6.085 | 6.032 | 6.142 | 6.115 |
| மொத்த தொழிலிலுள்ளோர் | 5.159 | 5.249 | 5.299 | 5.339 |
| பொருளியல் துறையின்படி | | | | |
| வேளாண்மை, கால்நடை, மீன்பிடி | 2.307 | 2.293 | 1.833 | 1.967 |
| சுரங்கமகழ்தலும், கல்லுடைத்தலும் | 0.090 | 0.066 | 0.032 | 0.092 |
| தயாரிப்பு | 0.727 | 0.740 | 0.769 | 0.864 |
| மின்வலு, வாயு, நீர் | 0.038 | 0.023 | 0.025 | 0.012 |
| கட்டடவாக்கம் | 0.164 | 0.171 | 0.260 | 0.270 |
| வர்த்தகமும், உணவுஅகங்களும் | 0.500 | 0.636 | 0.643 | 0.601 |
| போக்குவரத்து களஞ்சியப்படுத்தல் தொடர்பூட்டல் | 0.221 | 0.223 | 0.296 | 0.237 |
| காப்புறுதி, உண்மைச் சொத்து | 0.079 | 0.081 | 0.061 | 0.072 |
| தனியாள் பணிகள் | 0.851 | 0.776 | 1.080 | 0.952 |
| ஏனைய பணிகள் (குறிப்பிடப்படாதவை) | 0.180 | 0.238 | 0.299 | 0.272 |

* வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர

மூலங்கள் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் காலாண்டு தொழிற்படை அளவீடு

வீழ்ச்சியடைந்து செல்ல மற்றுறொரு உதவுகாரணியாக இருந்தது. வேளாண்மைத் தொழில்நிலை 1994 இனைவிட 7 சதவீதம் கூடுதலாக வளர்ச்சியடைந்தமையின் காரணமாக மொத்தத் தொழில்நிலையில் வேளாண்மைத்துறையின் பங்கில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும்போக்கு 1995 இல் ஓரளவு மாற்றமடைந்து 37 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்த போக்கினைப் பதிவுசெய்த பணிகள் துறையிலுள்ள தொழில்வாய்ப்புக்கள் 1990 இன் 36 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இன் மொத்தத் தொழில்நிலையில் 45 சதவீதத்திற்கு வகைகூறியது. பணிகள் துறைக்குள் தொழில்நிலையில் ஏற்பட்ட வளர்ச்சி பெரும்பாலும் வர்த்தகம், சுற்றுலா விடுதிப்பணிகள், போக்குவரத்து தொடர்பூட்டல்கள் மற்றும் தனியாள் பணிகள் என்பனவற்றில் காணப்பட்டன. இது கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட மொ. உ. உற்பத்திக்கான அவற்றின் அதிகரித்த பங்களிப்புடன் இணைந்து செல்லுவதாக இருந்தது. எனினும் 1995 இல் மொத்தத் தொழில் நிலையில் பணிகள் துறையின் பங்கு 40 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து நீங்கலான அனைத்து பணிகள் துணைத்துறைகளிலும் தொழில்நிலை வீழ்ச்சியடைந்தமையைப் பிரதிபலித்தது.

1995 இல் தயாரிப்புத்துறையில் உருவாக்கப்பட்ட மொத்தத்தொழில் நிலையின் பங்கு, 1994 இன் 14 சதவீதத்துடன ஒப்பிடுகையில் 16 சதவீதமாக விளங்கி தொழில்நிலையின் முக்கிய மூலங்களிலொன்றாக இத்துறையின் முக்கியத்துவம் வளர்ந்துவருவதனைப் பிரதிபலித்தது. இவ்வதிகரிப்பிற்கு வெளிநாட்டு முதலீடுகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சியுடன் சேர்ந்து ஆடைத்தொழிற்சாலைகளின் தொழில்வாய்ப்புக்கள் விரிவடைந்தமையே முக்கியகாரணமாகும்.

நன்கமைந்த தனியார்துறையின் தொழில்நிலை பற்றிய காலத்தொடர் தரவுகள் கிடைக்காதவிடத்து நன்கமைந்த தனியார்துறையின் தொழில்நிலையை மதிப்பிடுவதற்கு சேமநிதியங்களில் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் போன்ற குறிகாட்டிகள் பயன்படுத்தப்பட்டன. கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட அதிகரித்துச் செல்லும் போக்கு தொடர்ந்து காணப்படுவது 1995 இல் திருப்திகரமான பொருளாதார வளர்ச்சி அடையப்பட்டமையை பிரதிபலிப்பதாகவுள்ளமைக்கு அடையாளமாகும்.

முதலீட்டுச் சபையின் கீழுள்ள தொழில் முயற்சிகளின் தொழில் உருவாக்கம் 1995 இல் தொடர்ந்தும் விரிவடைந்தது. 1995 இல் முதலீட்டுச்சபையின் தொழில் முயற்சிகள் 233,000 பேருக்கு தொழில்வழங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. தொழில்நிலையில் ஏற்பட்ட அதிகரிப்பில் ஏறத்தாழ 85 சதவீதம் இரசாயன உற்பத்திகள், உணவு, குடிபானம், புகையிலை புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் மற்றும் பணிகள் வகையிலுள்ள தொழில் முயற்சிகளினால் வழங்கப்பட்டன. அத்தொழில் முயற்சிகளிலுள்ள தொழில் நிலையில் ஏறத்தாள 38 சதவீதம் கட்டுநாயக்கா ஏற்றுமதி செய்முறைப்படுத்தல் வலயத்தில் காணப்பட்டன. பியகம மற்றும் கொக்கல ஏற்றுமதி செய்முறைப்படுத்தல் வலயங்களில் உருவாக்கப்பட்ட

தொழில்நிலை முறையே 15 சதவீதத்திற்கும் 3 சதவீதத்திற்கும் வகைகூறின.

வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினூடான சுயதொழில் வாய்ப்பு உருவாக்கம் நன்கமையாத தனியார்துறையின் தொழில்நிலைக்கான பயன்மிக்க குறிகாட்டியாக விளங்குகின்றது. தொழிற்படையின் விகிதமாக சுயதொழில்புரியும் ஆட்களின் எண்ணிக்கை வேளாண்மைத்துறை நீங்கலாக அனைத்துத் துறைகளிலும் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காட்டியது. குறிப்பாக, வர்த்தகம் சுற்றுலா விடுதிகள் தனியாள் பணிகள் ஆகியவற்றில் மிகச் செறிவாகக் காணப்பட்டது. கொடுகடன் வசதிகள் தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள் என்பனவற்றின் ஏற்பாடுகள் தொடர்பாக பல்வேறுபட்ட அரச, அரசல்லா முகவர்களினால் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்களை சுயவேலைவாய்ப்பு விரிவடைய முக்கிய உதவுகாரணிகளாக விளங்கின. 1995 இல் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் 38,713 சிறிய அளவு சுயவேலைவாய்ப்பு செயற்றிட்டங்களுக்கு மொத்தமாக ரூ. 3,320 இலட்சங்கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

## 7.4. வெளிநாட்டுத் தொழில்நிலை

வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு நாட்டின் வேலையின்மை நிலைமையை இலகுபடுத்துவதற்கு தொடர்ந்தும் உதவியது. இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பணியகத்தினால் சேகரிக்கப்பட்ட தகவல்கள் 1995 இல் மொத்தமாக 170,131 பேர் வெளிநாட்டில் தொழில் பெற்றுள்ளமையை எடுத்துக்காட்டியதுடன் 1994 இனைவிட 5.2 சதவீதம்கொண்ட அதிகரிப்பினையும் பிரதிபலித்தது. கேள்வியில் பெரும்பகுதி தேர்ச்சி பெறாத வேலையாட்களுக்கானதாகவே இருந்தது. இவற்றில் பெரும் விகிதம் ஏறத்தாழ 66 சதவீதத்தினர் பெண் வேலையாட்களாவர். தொழில்வாய்ப்பிற்கான கேள்வி குறிப்பாக வீட்டுப்பணிபெண்களுக்கான கேள்வி சிங்கப்பூர், மாலைதீவு, இத்தாலி போன்ற மத்திய கிழக்கல்லா நாடுகளில் அதிகரித்துள்ளமையைத் தரவுகள் எடுத்துக்காட்டின. எனினும் உண்மையில் நீண்ட காலமாக மத்திய கிழக்கு நாடுகளில் சம்பளங்களும் கூலிகளும் ஒரே மட்டத்திலேயே காணப்பட்டபோதும் செல்வோரில் கிட்டத்தட்ட 92 சதவீதமான பெரும் பங்கினர்க்கு இந்நாடுகளே வகை கூறின.

புதிய தொழில் வாய்ப்புக்கள் தென்கொறியா, சிங்கப்பூர் போன்ற விரைவாக அபிவிருத்தியடைந்துவரும் தென்னாசிய நாடுகளில் காணப்படுகின்றன. வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்காகச் செல்லும் மக்கள் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் முக்கிய மூலமாகவும், உள்நாட்டு வேலைவாய்ப்பின்மைச் சுமையைக் குறைத்து வருவதனாலும் அரசாங்கம் இம்மக்களுக்கான வசதிகளை தொடர்ந்தும் முன்னேற்றி விரிவாக்கிவருகின்றது.